# நாகப்பட்டினம் நகராட்சி

2025– ம் ஆண்டு மே மாதம் 8– ஆம் நாள் வியாழன் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மான நகல்

<table>
<tr><th>கூட்ட நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>08.05.2025</td><td>பொருள் எண். 1<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் மார்ச் 2025 மற்றும் ஏப்ரல் 2025 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும்.</td><td>தீர்மானம் எண்.1<br>பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td>08.05.2025</td><td>பொருள் எண். 2<br>நாகப்பட்டினம் நகராட்சியின் நமக்கு நாமே திட்டம் 2024–25ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 19730/2024/தி2 நாள் 27.02s.2025ல் அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து 03.03.2025 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 16.04.2025 அன்று மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு.<br>
<table>
<tr><th rowspan="2">வ, எண்</th><th rowspan="2">பணியின் பெயர்</th><th rowspan="2">மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில்</th><th rowspan="2">ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்)</th><th colspan="2">மதிப்பீட்டு விலை விகிதம்</th></tr>
<tr><th>குறைவு</th><th>அதிகம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30 ல் சிசிடிவி கேமரா பொருத்தும் பணி</td><td rowspan="2">12.00</td><td>ஜெ.எம்.ரஹமத்துல்லா, கூத்தாநல்லூர்</td><td>0.08</td><td>–</td></tr>
<tr><td>ஜி.தேவராஜ், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம்.</td><td>–</td><td>1.46</td></tr>
</table>
மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜெ.எம்.ரஹமத்துல்லா, கூத்தாநல்லூர் என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டு பணியினை உடன் மேற்கொள்ள அறிவுறுத்தி வேலை உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.</td><td>தீர்மானம் எண். 2<br>பதிவு செய்யப்பட்டது</td></tr>
</table>

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |
|---|---|---|

ந.க.எண்.1623/2022/இ1

08.05.2025

**பொருள் எண்.** 3

நாகப்பட்டினம் நகராட்சியின் 15வது மத்திய நிதிக்குழு மான்யம்– 15வது மத்திய நிதிக்குழு மான்யம் Tied Grant 2022 – 23ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 16494/2023/இஏ2 நாள் 26.02.2025ல் அனுமதி வழுங்கப்பட்டதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண் 1240/2024/இ2 நாள் 07.03.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 16.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாளசாக்கடை கழிவுநீர் நீரேற்று நிலையங்கள் மற்றும் குடிநீர் விநியோக நீரேற்று நிலையங்களுக்கு 13 எண்ணிக்கையிலான நீர்முழ்கி மின்மோட்டார்கள் விநியோகம் செய்யும் பணி. | 35.33 | மெசர்ஸ் அமரா கன்ஸ்ட்ரக்ஷன், நாகப்பட்டினம் | 0.04 | – |
| | | | என். செந்தில்குமார், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 0.22 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மெசர்ஸ் அமரா கன்ஸ்ட்ரக்ஷன், நாகப்பட்டினம் என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கப்பட்டு பணியினை உடன் மேற்கொள்ள அறிவுறுத்தி வேலை உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |
|---|---|---|

தீர்மானம் எண்.3
அ.கு.
பதிவு
செய்யப்பட்டது

| | | |
|---|---|---|
| | ந.க.எண். 2846-3/2022/இ1 | |
| 08.05.2025 | **பொருள் எண். 4**<br>நாகப்பட்டினம் நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தில் அமைந்துள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் தரத்தை ஆய்வு செய்ய OCEMS என்ற கருவி பொருத்தப்பட்டுள்ளது. அதனை பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் நாகப்பட்டினம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு உரிய தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 8.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண்.147 /2025/இ1 | தீர்மானம் எண்.4<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 08.05.2025 | **பொருள் எண். 5**<br>நாகப்பட்டினம் நகராட்சிகுட்பட்ட வார்டு எண் 22. அரியபத்திர பிள்ளை தெரு சந்து மற்றும் பப்ளிக் ஆபிஸ் ரோடு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் சேதமடைந்து மழைகாலங்களில் மழைநீர் சாலைகளில் ஓடுவதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதாலும் மற்றும் பொதுசுகாதார கேடு விளைவிப்பதாலும் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>ந.க.எண்.147 /2025/இ1 | தீர்மானம் எண்.5<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 08.05.2025 | **பொருள் எண். 6**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் வி.ஐ.பி நகரில் புதியதாக பாதாள சாக்கடை குழாய் மற்றும் மூன்று எண்ணிக்கையிலான இயந்திர குழிகள் அமைத்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்..<br><br>ந.க.எண்.147/2025/இ1 | தீர்மானம் எண்.6<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>08.05.2025</td><td>

**பொருள் எண்.7**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தில் நீரேற்று நிலையங்களில் உள்ள கிணறுகளில் தேங்கியுள்ள கசடுகளை சுத்தம் செய்திடவும் மற்றும் இயந்திர குழிகளில் உள்ள கசடுகளை சுத்தம் செய்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>

ந.க.எண்.147 /2025/இ1</td><td>தீர்மானம் எண்.7<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>08.05.2025</td><td>

**பொருள் எண்.8**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட கோட்டைவாசல் உரக்கிடங்கில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள Green bin shed கட்டிடம் அமைப்பதற்குரிய இடத்தில் தேங்கிய குப்பைகளை JCB மற்றும் Tractor கொண்டு குப்பைகளை அப்புறப்படுத்தி இடத்தை சுத்தம் செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>

ந.க.எண்.147 /2025/இ1</td><td>தீர்மானம் எண்.8<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>08.05.2025</td><td>

**பொருள் எண்.9**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 32ல் உள்ள புளியமரத்துகோடி பகுதியில் மழைகாலங்களில் சாலையில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதால் சாலையில் உள்ள பள்ளங்களை WMM கொண்டு நிரப்பும் பணியை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 2.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>

ந.க.எண்,147 /2025/இ1</td><td>தீர்மானம் எண்.9<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>08.05.2025</td>
<td>

**பொருள் எண்.10**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் மற்றும் நாகப்பட்டினம் உரக்கிடங்கில் உள்ள நுண்ணுயிர் உரக்குடிலில் (MCC) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள துப்புரவு ஆய்வாளர் அவர்களால் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு உடன் பணியினை செய்துதர கோரி குறிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து மேற்படி நுண்ணுயிர் உரக்குடில் மையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

<table>
<tr><td rowspan="2">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>

ந.க.எண்,1165 /2025/இ1
</td>
<td>தீர்மானம் எண்.10<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>08.05.2025</td>
<td>

**பொருள் எண்.11**

நாகப்பட்டினம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள புதிய கடற்கரையில் அமையப்பெற்றுள்ள இரண்டு உயர்கோபுர மின்விளக்குகள் மற்றும் இரண்டு சிறிய உயர்கோபுர மின்விளக்குகள் ஒளிர்வதற்கு Junction pillar box பழுதடைந்து இயக்க இயலாத பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் புதியதாக அனைத்து விதமான மின்உபகரணங்கள் அமைப்புடன் கூடிய Junction pillar box- 4 எண்ணிக்கைகள் அமைப்பதற்கு உண்டான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><td rowspan="2">அலுவலக குறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>

ந.க.எண்.147/2025/இ1
</td>
<td>தீர்மானம் எண்.11<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>08.05.2025</td>
<td>

**பொருள் எண்.12**

நாகப்பட்டினம் நகராட்சியில் ரூ.79.31 கோடி திட்ட மதிப்பீட்டில் பாதாளச்சாக்கடை திட்டம் மேற்கொள்ள அரசாணை(டி) எண் 132. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.02.2011ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி திட்டப்பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணியின் கீழ் நாகப்பட்டினம் மற்றும் நாகூர் பகுதியில் 84.381 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் குழாய்களும், 3229 எண்ணிக்கையிலான இயந்திரம் நுழையும் தொட்டியும் மற்றும் 9676 வீட்டு இணைப்புகளும் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்காளல் 27.12.2016 அன்று சிறப்பாக செயல்படுத்திட திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாகூர் மற்றும் நாகப்பட்டினம் பகுதிகளில் சேகரமாக கழிவுநீரை பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் சுத்திகரிப்பு செய்யும் பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்
</td>
<td>தீர்மானம் எண்.12<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது முதற்கட்டமாக நாகப்பட்டினம் மேலக்கோட்டை வாசலில் அமைந்துள்ள 9.63 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை (ASP Method) நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதற்குண்டான ஆவணங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் சமர்பிக்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினம் மேலக்கோட்டை வாசலில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை நகராட்சியின் சார்பாக உரிய அலுவலர்களால் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் இனங்கள் வாரியாக உள்ள கூறுகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எனவே நாகப்பட்டினம் மேலக்கோட்டை வாசலில் இயங்கி வரும் பாதாள சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து நகராட்சி வசம் எடுத்து 10.01.2025 முதல் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
<table>
<tr><td rowspan="3">அலுவலக குறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வந்ததனை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டதனை தொடர்ந்து நகராட்சியின் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
<tr><td>3</td><td>மேற்காணும் பணிக்கு பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையத்திற்கு உண்டான பராமரிப்பு செலவினை நகராட்சியின் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண், 3135 /2018/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.05.2025</td>
<td>பொருள் எண்.13<br>
நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வருகின்ற கோடைகாலத்தில் குடிநீர் தட்டுபாட்டை தவிர்க்கும் வண்ணம் அனைத்து பகுதிகளுக்கும் டிராக்டர் மூலம் குடிநீர் விநியோகம் செய்திட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>
<table>
<tr><td rowspan="2">அலுவலக குறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண். 147 /2025/இ1</td>
<td>தீர்மானம் எண்.13<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>08.05.2025</td>
<td>
பொருள் எண்.14<br>
நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் கோடைகால வெப்பத்தை சமாளிப்பதற்கு ஏதுவாக பொதமக்களின் நலன் கருதி புதிய பேருந்து நிலையம், கோட்டைவாசல், நாகூர் பேருந்து நிலையம் மற்றும் இதர பகுதிகளில் நிழல் வலை(GREEN NET) அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
<table>
<tr><td rowspan="2">அலுவலக குறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
ந.க.எண். 1085 /2024/இ1-1
</td>
<td>தீர்மானம் எண்.14<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>08.05.2025</td>
<td>
பொருள் எண்.15<br>
நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான காடம்பாடி முதல் செல்லூர் சுடுகாடு வரையிலான மழைநீர் வடிகால் (Major Channel) மற்றும் செல்லூர் சுடுகாடு முதல் நல்லியான் தோட்டம் இரயில்வே கேட் வரை உள்ள மழைநீர் வடிகாலில் குப்பைகள் மற்றும் மண் சேர்ந்து மழைகாலங்களில் மழைநீர் தேங்கி உள்ளதால் பொதுமக்களுக்கு மிகுவும் சிரமமாக உள்ளதாலும், பொது சுகாதார கேடுவிளைவிப்பதாலும் மேற்படி (Major Channel) மழைநீர் வடிகாலை JCB மூலம் தூர்வாருவதற்கு உத்தேச செலவினம் ரூ.5,00,000/- ஐந்து இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது
<table>
<tr><td rowspan="2">அலுவலக குறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதிக்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
</table>
ந.க.எண். /2025/எச்1
</td>
<td>தீர்மானம் எண்.15<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>08.05.2025</td>
<td>
பொருள் எண்.16<br>
நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21ல் வ.ஊ.சி தெருவில் உள்ள மந்தையம்மன் கோவில் அருகில் சாலை பள்ளமாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி அப்பகுதி பொதுமக்கள் சிரமப்படுகிறார்கள். எனவே மேற்படி அப்பகுதியை நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி புதியதாக பேவர் பிளாக் பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.14.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><td rowspan="2">அலுவலக குறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.16<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

ந.க.எண்.. 147 /2025/இ1

08.05.2025

## பொருள் எண்.17

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நகர்மன்ற தலைவரின் வாகனம் எண் TN 51 – AR-3811 வாகனத்திற்கு புதியதாக டயர்கள் வாங்குவதற்கு 16.04.2025 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணிமனை நிறுவனங்களின் விவரம் | வழங்கப்பட்டத் தொகை (வரிகள் உட்பட) |
|---|---|---|
| 01. | ஸ்ரீ சாந்தி டயர்ஸ், 150, பாரதியார் ரோடு, காரைக்கால். | ரூ.75,000 |
| 02. | முத்தா எண்டர்பிரைசஸ் 150/A , பாரதியார் ரோடு, காரைக்கால். | ரூ.77,500 |
| 03. | ஸ்ரீ சாந்தி டிரேடர்ஸ், 6 கைலாசநாதர் கோவில் தெரு, காரைக்கால். | ரூ.80,000 |

மேற்படி நிறுவனங்களிலிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ சாந்தி டயர்ஸ், 150, பாரதியார் ரோடு, காரைக்கால் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்படி வாகனத்திற்கு புதியதாக டயர்கள் விநியோகம் செய்வதற்காக பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அளித்துள்ள ஸ்ரீ சாந்தி டயர்ஸ், 150, பாரதியார் ரோடு, காரைக்கால் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம் |
| | 3 | மேற்படி பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | | மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் |

தீர்மானம் எண்.17
அ.கு,
அனுமதிக்கப்பட்டது

ந.க.எண் 961/2025/இ2

08.05.2025

## பொருள் எண்.18

நாகப்பட்டினம் நகராட்சியின் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் - 2025-26ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி

தீர்மானம் எண். 18
பதிவு
செய்யப்பட்டது

நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 9730/2025/எஸ்எஸ்1 நாள் 02.04.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 28.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதன் விவரம் பின்வருமாறு.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | தார் சாலை அமைத்தல்– பெரிய கடைத்தெரு, குஞ்சாலி மரைக்காயர் தெரு, நெல்லுக்கடைத் தெரு, செய்யது பள்ளி தெரு, மனவரா வடக்கு, மியாத்தெரு, தெருப்பள்ளி தெரு, கீழப்பட்டினச்சேரி, பொறையாத்தாகடை தெரு, தைக்கால் தெரு, வாணக்கரைத் தெரு, தங்கச்சி மண்டபதெரு, தெத்தி புதுசாலை, பழைய நாகூர் சாலை, காடம்பாடி பிள்ளையார் கோவில் தெரு | 182.60 | மெசர்ஸ் திருமலையான் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், நாகப்பட்டினம். | 0.02 | – |
| | | | ஸ்ரீ பாலாஜி பில்டர்ஸ், நாகப்பட்டினம். | – | 2.19 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | தார் சாலை அமைத்தல் – பஞ்சாயத்து யூனியன் ஆபிசர்ஸ் குவாட்டர்ஸ் சாலை, நம்பியார் நகர் ரோடு, வேர்ஹவுஸ் ரோடு, பெருமாள் வடக்கு வீதி, சுப்பமுதலியார் தெரு, நடுக்கண்தீர்த்த பிள்ளையார் சன்னதி தெரு, பெருமாள் கீழவீதி, தாமரைக்குளம் தென்கரை, சலவைக்குளம் முகமதியார் தெரு, பாரதி மார்கெட் மேல்புறம், பாரதிமார்கெட் தென்புறம், நல்லியான் தோட்டம். மகம் சாலை. | 189.00 | மெசர்ஸ் திருமலையான் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், நாகப்பட்டினம். | 0.01 | – | |
| | | | | | ஸ்ரீ பாலாஜி பில்டர்ஸ், நாகப்பட்டினம். | – | 1.34 | |
| | | 3 | தார் சாலை அமைத்தல் – தேவய்யர் தெரு, நீலைமேலவீதி, மோசா பள்ளி தெரு, புதுப்பள்ளி தெரு, யாஹீசைன் பள்ளி தெரு, இரண்டாம் கடற்கரை சாலை, | 81.00 | மெசர்ஸ் டெல்டா இன்ஜினியரிங் சர்வீஸ், நாகப்பட்டினம் | 0.01 | – | |
| | | | | | ஸ்ரீ பாலாஜி பில்டர்ஸ், நாகப்பட்டினம். | – | 2.02 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சட்டையப்பர் மேலவீதி, அக்கரைக்குளம் மேல்கரை, கீரைக்கொல் லை தெரு, ரயில்வேகேட் பின்புறம். | | | | |
| 4 | சிமெண்ட் தளம் அமைத்தல்– நூர்சா தைக்கால் தெரு, தங்கச்சி மடத்தெரு,அளவு க்காரன் தோட்டம், பீரோடும் பூந்தோட்டம். | 45.70 | திரு.எஸ். சத்யநாராயண ன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.01 | – |
| | | | திரு.கே. கோபாலகிருஷ் ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 1.01 |
| 5 | சிமெண்ட் தளம் அமைத்தல்– புதிய நம்பியார் நகர்(சுனாமி குடியிருப்பு)வ ளைவு பகுதி | 160.60 | திரு. ஜே.ஜேசு ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.01 | – |
| | | | மெசர்ஸ் டெல்டா இன்ஜினியரிங் சர்வீஸ், நாகப்பட்டினம் | – | 3.98 |
| 6 | சிமெண்ட் தளம் அமைத்தல்– நம்பியார் நகர் காலனி தெரு, தெற்கு நல்லியான் தோட்டம், செக்கடி தெரு, கல்லுக்கார தெரு, மருந்துக்கொத்த ளம் செட்டித்தெரு,ச ட்டையப்பர் சன்னதி தெரு. | 67.00 | திரு. பி.ரகுநாதன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.01 | – |
| | | | திரு.கே. கோபாலகிருஷ் ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 1.16 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | சிமெண்ட் தளம் அமைத்தல்– ஜான்சன் தெரு, பழந்தெரு1வது சந்து, பழந்தெரு 2வது சந்து, பழந்தெரு 3வது சந்து, எருத்துக்கார தெரு மற்றும் சேவாபாரதி | 71.00 | திரு. ஜே.ஜேசு ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.01 | – |
| | | | மெசர்ஸ் திருமலையான் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், நாகப்பட்டினம். | – | 1.01 |
| 8 | சிமெண்ட் தளம் அமைத்தல்– டாடாநகர் (சுனாமி குடியிருப்பு) பகுதி | 93.00 | திரு.என். செந்தில்குமார், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.01 | – |
| | | | மெசர்ஸ் திருமலையான் கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட், நாகப்பட்டினம். | – | 1.08 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |

ந.க.எண். 2103/2023/இ1

08.05.2025

**பொருள் எண்.19**

நாகப்பட்டினம் நகராட்சியின் மாநில நிதிக்குழு பள்ளி மேம்பாட்டு மான்யம் புதியதாக கட்டுதல் மற்றும் புனரமைப்பு செய்யும் பணி - 2025–26ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின்கடிதம் ந.க.எண் 9732/2025/எஸ்எஸ்2 நாள் 03.04.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 28.04.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதன் விவரம் பின்வருமாறு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |

தீர்மானம் எண்.19

பதிவு செய்யப்பட்டது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1. | நாகப்பட்டினம் சேவாபாரதி அங்கன்வாடி மையக்கட்டிடம் கட்டும் பணி | 15.00 | திரு.பி. சிவசக்தி, நாகப்பட்டினம் | 0.02 | – | |
| | | | | திரு.கே. கோபாலகிருஷ்ணன் நாகப்பட்டினம் | – | 3.25 | |
| | 2 | நாகப்பட்டினம் சாலமன் பூங்காவில் அங்கன்வாடி மையக்கட்டிடம் கட்டும் பணி | 15.00 | திரு. பி.ரகுநாதன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.03 | – | |
| | | | | திரு.கே. கோபாலகிருஷ்ணன் நாகப்பட்டினம் | – | 2.42 | |
| | 3 | நாகப்பட்டினம் புதிய நம்பியார் நகர் பகுதியில் அங்கன்வாடி மையக்கட்டிடம் கட்டும் பணி | 15.00 | திரு.ஆர்.கே. முத்துகிருஷ்ணன், நாகப்பட்டினம் | 0.05 | – | |
| | | | | திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 0.83 | |
| | 4 | நாகப்பட்டினம் சூர்யா நகர் பகுதியில் அங்கன்வாடி மையக்கட்டிடம் கட்டும் பணி | 15.00 | திரு. எஸ்.சத்யநாராயணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.04 | – | |
| | | | | திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 3.07 | |
| | 5 | நாகப்பட்டினம் வேதநாயகம் செட்டித்தெருவில் அங்கன்வாடி மையக்கட்டிடம் கட்டும் பணி | 15.00 | திரு.எஸ். கருணாநிதி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | 0.02 | – | |
| | | | | திரு.கே. கோபாலகிருஷ்ணன் ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம் | – | 1.17 | |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க.எண். **4393/2023/இ1–** | |
| 08.05.2025 | **பொருள் எண்.20**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23–ல் வேர்ஹவுஸ் சாலையில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை உடன் சீர்செய்துதர அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி சிறுபாலத்தினை புதியதாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 2.65 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.20<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.21**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 23ல் மகம் சாலையில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனை உடன் சீர்செய்துதர அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி சிறுபாலத்தினை புதியதாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br>அலுவலக குறிப்பு — 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.147 /2025/இ1 | தீர்மானம் எண்.21<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.22**<br>அரசாணை (நிலை)எண்.97 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (LD-1(1) துறை நாள் 21.2.2025–ன் படி வருவாய் நிலை எண். 21–ன் படி இலவச வீட்டு மனை பட்டா வழங்கிட நகர்புற பகுதியை ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கில் குடியிருந்து வரும் நபர்களுக்கு பட்டா வழங்கிட வழிமுறைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து நகராட்சி பகுதியில் உள்ள அரசு புறம்போக்கு பகுதிகளான கீழ்கண்ட பகுதியில் குடியிருந்து வரும் நபர்களுக்கு இலவச பட்டா வழங்க நகர்மன்ற தலைவர் அவர்களால் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு வழங்கப்பட்ட இடம் குறித்த பட்டியல் மன்ற தீர்மானம் | தீர்மானம் எண்.22<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |

பெற்று வழங்கிட திரும்ப வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பிளாக் எண் | நகரளவு எண் | பரப்பளவு | வகைபாடு | உரிமையாளர் பெயர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 6 | 17 | 1084/1 | 0.0365.0 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 2. | 6 | 17 | 1085/3 | 0.0535.5 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 3. | 6 | 17 | 1088/1F | 0.0303.0 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 4. | 6 | 17 | 1088/1A | 0.1401.5 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 5. | 3 | 01 | 44 | 0.3807.0 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 6. | 6 | 17 | 1084/3 | 0.0163.0 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 7. | 6 | 17 | 1085/4 | 0.1041.5 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 8. | 6 | 17 | 1088/1C | 0.0945.0 | ச. புறம்போக்கு | நகராட்சி |
| 9. | 4 | 17 | 550 | 0.0080.0 | ச. புறம்போக்கு தோப்பு | சர்க்கார் |
| 10. | 4 | 16 | 493/1, 496/1 | 0.0280.0 | ச. புறம்போக்கு தோப்பு | சர்க்கார் |
| 11. | 4 | 16 | 493/1 | 0.0080.0 | ச. புறம்போக்கு தோப்பு | சர்க்கார் |
| 12. | 4 | 17 | 520/1 | 0.0080.0 | ச. புறம்போக்கு தோப்பு | சர்க்கார் |
| 13. | 4 | 17 | 550/1 | 0.0080.0 | ச. புறம்போக்கு தோப்பு | சர்க்கார் |

| அலுவலக குறிப்பு | 1 | மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் |
|---|---|---|

ந.க.எண். 00881/2025/எப்1.

08.05.2025

## பொருள் எண்.23

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் அருள்மிகு ஸ்ரீ நெல்லுக்கடை மாரியம்மன் கோவில் திருவிழா அடிக்கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2025–2026

தீர்மானம் எண்.23
அ.கு.
அனுமதிக்கப்பட்டது

ஆம் ஆண்டிற்கு ஒப்படைக்கும் நாள்முதல் ஓராண்டிற்கான உரிமத்திற்கு (அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு வருடமும் 5 சதவீதம் உயர்வு செய்து உரிமம் நீட்டிக்கப்படும்) 23.04.2025 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | எ.பிரவீன்குமார்<br>த/பெ.ஆசைதம்பி<br>இரயிலடி தெரு,<br>வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம்.<br>செல்.9566838014 | 2,54,600 | -- |
| 2 | ஆர்,.சுந்தர்ராஜ்<br>71, ராமநாயக்கன் குளத்தெரு,<br>நாகப்பட்டினம்.<br>செல்.9842498699 | ஏலம் கோரவில்லை | -- |
| 3 | எம்.மணிபிரகாஷ்<br>த/பெ. . மணவாளன்<br>2/16, சிவன் கீழவீதி,<br>நாகப்பட்டினம்..<br>செல்.7010724471 | ஏலம் கோரவில்லை | -- |
| 4 | கே.முத்துக்குமார்<br>6, தாண்டவராயபிள்ளை தெரு,<br>நாகப்பட்டினம்.<br>செல்.8122277747 | 2,54,800 | -- |
| 5 | ஆர்.செல்வகுமார்<br>த/பெ.ராசுதேவர்<br>18.வ.உ..சி.தெரு,<br>வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம் | ஏலம் கோரவில்லை | -- |
| 6 | ஆர்.பாபு த/பெ,எம்.ராமசாமி<br>2, தண்டபாணி செட்டித்தெரு<br>கீரைக்கொல்லத்தெரு,<br>நாகப்பட்டினம்.<br>செல்.9843225348 | 2,55,000 | -- |
| 7 | பி.முருகானந்தம்<br>த/பெ.பெரியசாமி<br>தெப்பமுதலியார் தெரு, சிக்கல்<br>வலம், தேமங்கலம்<br>நாகப்பட்டினம். | ஏலம் கோரவில்லை | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| | செல்.9976049128 | | | |

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மேற்கண்ட விபரத்தின்படி வரிசை எண்.6-ல் உள்ள திரு.ஆர்.பாபு என்பவரின் ஏலக்கேள்வி மற்றவர்களின் ஏலக்கேள்வியை விட கூடுதலாகவும் நிர்ணயிக்கப்பட்ட அரசு மதிப்பை (ரூ.2,54,373/-) விட கூடுலாகவும் உள்ளது. எனவே, வரிசை எண்.6-ல் உள்ள திரு.ஆர்.பாபு என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.2,55,000/ஐ ஒப்புக்.கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் திருவிழா தொடங்குவதற்கு ஒரு சில தினங்கள் இருப்பதால் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண். 2613/2024/அ1

08.05.2025

## பொருள் எண்.24

நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கட்டணம் கழிவறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2025-2026 ஆம் ஆண்டிற்கு ஒப்படைக்கும் நாள்முதல் ஓராண்டிற்கான உரிமத்திற்கு (அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒவ்வொரு வருடமும் 5 சதவீதம் உயர்வு செய்து உரிமம் நீட்டிக்கப்படும்) 23.04.2025 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஏலக்கேள்விகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | எ.பிரவீன்குமார் த/பெ.ஆசைதம்பி இரயிலடி தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம். செல்.9566838014 | 19,97,700 | -- |
| 2 | எ. குணசேகரன் த/பெ.சி.ஆசைதம்பி இரயிலடித்தெரு, வெளிப்பாளையம், நாகப்பட்டினம். செல்.8667335968 | 19,98,000 | -- |
| 3 | என். செல்வம் த/பெ. நல்லு மேலவாய்க்காங்கரைதெரு வெளிப்பாளையம், நாகப்பட்டினம். | 19,97,800 | -- |

தீர்மானம் எண்.24
திரு.எ.குண சேகரன் என்பவரின் ஏலக் கேள்வி அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | செல்.9442698874 | |
| | அலுவலக குறிப்பு — 1. மேற்கண்ட விபரத்தின்படி வரிசை எண்.2–ல் உள்ள திரு. எ.குணசேகரன் என்பவரின் ஏலக்கேள்வி மற்றவர்களின் ஏலக்கேள்வியை விட கூடுதலாகவும் நிர்ணயிக்கப்பட்ட அரசு மதிப்பை (ரூ.19,96,910/–) விட கூடுலாகவும் உள்ளது . எனவே, வரிசை எண் .2–ல் உள்ள திரு .எ.குணசேகரன் என்பவரின் ஏலக்கேள்வி தொகை ரூ.19,98,000/ஐ மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| | ந.க.எண். 2613/2024/அ1 | |
| 08.05.2025 | **பொருள் எண்.25**<br>நாகப்பட்டினம் நகராட்சியில் 2025–2026 ஆம் நிதியாண்டில் சொத்துவரி, காலிமனைவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், பாதாளசாக்கடை கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களில் 100% வசூல் செய்திட ஏதுவாக ஆட்டோ மூலம் வரி நிலுவை தொகையினை செலுத்திடக்கோரி பொது மக்களுக்கு விளம்பரம் செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு —<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.25<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| | ந.க.எண்.1428/2024/அ1 | |
| 08.05.2025 | **பொருள் எண்.26**<br>நாகப்பட்டினம் நகராட்சியில் 2025–2026 ஆம் நிதியாண்டில் வார்டு எண்,1 முதல் 36 வரையிலான சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் பாதாளசாக்கடை கட்டணம் அடங்கிய (Demand Notice All Tax) கேட்பு அறிவிப்பு பட்டியல் Tamil Nadu Multipurpose Indco Serve நிறுவனத்திடமிருந்து அச்சிடுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–க்கும், 2023–2024 ஆம் ஆண்டில் சொத்துவரி கேட்பு அறிவிப்பு பட்டியல் அச்சிடப்பட்டதற்கான தொகை ரூ.1,21,332/– வழங்கப்படாமல் உள்ளது. ஆக கூடுதல் தொகை ரூ.4,21,332/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு —<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து அவசர அவசியம் கருதி செலவு செய்யப்பட்டதை மன்றம் அனுமதி வழங்கலாம் | தீர்மானம் எண்.26<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| | ந.க.எண்.1428/2024/அ1 | |
| 08.05.2025 | **பொருள் எண்.27**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள்.23.09.2024 | தீர்மானம் எண்.27<br>பதிவு செய்யப்பட்டது |

மறுபொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நாள்.28.01.2024 மற்றும் 23.04.2025 ஆகிய மூன்று முறை ஏலம் விடப்பட்ட நிலையில் கீழ்கண்ட இனங்கள் ஏலம் போகாமல் உள்ளது, அதன்விவரம்

**குத்தகை இனங்கள் பட்டியல் – I (ஒப்படைக்கும் நாள் முதல் ஓராண்டு வரை)**

| வ.எண் | குத்தகை இனத்தின் விபரம் | ஏலவைப் பத்தொகை ரூ | சொத்து மதிப்பு சான்றிதழ் அளிக்காவிட்டால் செலுத்தவேண்டிய கூடுதல் பொறுப்புத்தொகை ரூ | அரசு மதிப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் அக்கரைகுளம் சந்திப்பு பகுதி அடிக்கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10,000 | 20,000 | 46432 |
| 2 | நாகப்பட்டினம் ஆசாத் மார்க்கெட் உட்புறம் 18 (வடப்புறம்) ஸ்டால்கள் உள்ள மீன் கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000 | 6,00,000 | 58359 |
| 3 | நாகப்பட்டினம் ஆசாத் மார்க்கெட் உட்புறம் 16 (தென்புறம்) ஸ்டால்கள் உள்ள இறைச்சி கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 3,00,000 | 6,00,000 | 37569 |
| 4 | நாகப்பட்டினம் பாரதி நாளங்காடி காய்கறி கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10,000 | 20,000 | 130060 |
| 5 | நாகப்பட்டினம் பாரதி நாளங்காடி இறைச்சி கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 10,000 | 20,000 | 260500 |
| 6 | நாகப்பட்டினம் அடிக்கடைகளில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2,50,000 | 5,00,000 | 2604700 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | நாகப்பட்டினம் புதிய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 2,50,000 | 5,00,000 | 865910 |
| 8 | நகராட்சி அலுவலக தோட்ட மாமரம் மற்றும் தென்னை மரங்களில் மகசூல் வசூல் செய்யும் உரிமம் | 5000 | -- | 7293 |
| 9 | சாலமன் பூங்காவில் உள்ள தென்னை மரங்களில் மகசூல் வசூல் செய்யும் உரிமம் | 5000 | -- | 15165 |

மேற்கண்ட 1 முதல் 9 வரையிலான ஓராண்டு குத்தகை இனங்களின் வைப்புத்தொகை, கூடுதல் வைப்புத்தொகை மற்றும் அரசு மதிப்புத்தொகை கூடுதலாக உள்ளதாக தெரிவித்து ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. எனவே மேற்கண்ட இனங்களின் ஏல வைப்புத்தொகை, கூடுதல் வைப்புத்தொகை மற்றும் அரசு மதிப்புத்தொகையினை குறைத்து மதிப்பீடு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் சுற்றறிக்கையில் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசாணை (2ப) எண்.66 நாள்.06.08.2024–ல் தெரிவித்துள்ளதின்படி வழிகாட்டுதல் குழு மற்றும் துணைக்குழுவிற்கு அனுப்பிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பதிவு செய்யலாம். |

ந.க.எண். 2613/2024/அ1

08.05.2025

## பொருள் எண்.28

07–12–2022 தேதியிட்ட அரசாணை (நிலை) எண்.170 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி2) துறையால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் (SUIDF) கீழ், தமிழ்நாடு நகர்ப்புற நிதி உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக லிமிடெட் (TUFIDCO) இலிருந்து நகராட்சியின் பங்காக (AMRUT 2.0 திட்டம்) க்கு குடிநீர் வழங்கல் விநியோக முறையை மேம்படுத்துவதற்காக" ரூ.12.62 கோடி கடன் தொகையினை பெற்றிட அறிவுறுத்தப்பட்டது. TUFIDCO உடன் கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள் ஏதேனும் இருந்தால், அவற்றை நிறைவேற்றவும், நாகப்பட்டினம் நகராட்சிக்கு TUFIDCO உடன் செயல்படுத்த வேண்டிய ஆவணங்களில் நாகப்பட்டினம் நகராட்சி பொதுவான முத்திரையை ஒட்டுவது உட்பட அனைத்து பிற சம்பிரதாயங்களையும் பூர்த்தி செய்யவும் இதன் மூலம் அறிவுறுத்தப்பட்டது. சொத்து வரி, தொழில்முறை வரி மற்றும் பிற வருவாய் வசூல்கள் போன்ற வருவாய் வசூல்களுக்கான நாகப்பட்டினம் நகராட்சி வங்கிக்

தீர்மானம் எண்.28
அ.கு. அனுமதிக்கப்பட்டது

<table>
<tr><td rowspan="3"></td><td colspan="3">கணக்கு, காலாண்டு/மாதாந்திர திருப்பிச் செலுத்தும் உறுதிப்பாட்டின் அளவிற்கு TUFIDCO–க்கு ஆதரவாகப் பயன்படுத்தப்படும் எனவும் இதற்காக பிரத்யேக Escrow கணக்கு தொடங்கிடவும், இத்திட்டத்தின் கீழ் TUFIDCO–விற்கு கடன் மற்றும் பிற அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்தும் வரை கணக்கினை செயல்பாட்டில் வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்ட முன்மொழிவுக்காக TUFIDCO–விற்கு பெறப்பட்ட கடனுக்கான அசல், வட்டி மற்றும் பிற பணத்தை திருப்பிச் செலுத்துவதற்கு நாகப்பட்டினம் நகராட்சியின் ஆண்டு பட்ஜெட்டில் வழிவகை செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காகப் பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக, அசல், வட்டி மற்றும் TUFIDCO–விற்கு செலுத்த வேண்டிய பிற பணத்தைத் திருப்பிச் செலுத்தத் தவறினால், மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் கீழ் அதிகாரப் பகிர்வு மானியம் செலுத்துதல், பிற மானியங்கள், அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய வரி மற்றும் முத்திரை வரிகளில் பங்கு போன்றவற்றிலிருந்து தமிழ்நாடு அரசால் ஈடுசெய்து கொள்ள ஒப்புதல் வழங்கப்படுகிறது. நாகப்பட்டினம் நகராட்சி சொத்து வரி, தொழில்முறை வரி போன்றவற்றில் ஏதேனும் காரணத்தால் திட்டமிட்டபடி அதிகரிப்பு செயல்படுத்தப்படாவிட்டால், எந்தக் காலகட்டத்திலும் ஏற்படும் ஏதேனும் குறுகிய கால வீழ்ச்சி TUFIDCO–க்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்துவதைப் பாதிக்காது என்றும், அத்தகைய சூழ்நிலையில், தமிழக அரசினால் வழங்கப்படும் மாநில நிதிக்குழு நிதியிலிருந்து குறிப்பிட்ட நிலுவைத் தொகையைக் ஈடுசெய்துகொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.</td><td></td></tr>
<tr><td>அலுவலக குறிப்பு</td><td>1</td><td>இந்நகராட்சியின் நிதிநிலையினை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td><td></td></tr>
<tr><td colspan="3">ந.க.எண் 597–2/2022/இ1</td><td></td></tr>
<tr><td rowspan="4">08.05.2025</td><td colspan="3">பொருள் எண்.29<br>. நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் திட்டத்தின் கீழ் இயங்கிவரும் நீரேற்று நிலையங்களில் அவ்வப்போது ஏற்படும் மின்மோட்டார்கள் மற்றும் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர்செய்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது</td><td>தீர்மானம் எண்.29<br>அ.கு, அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td rowspan="2">அலுவலக குறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td><td rowspan="2"></td></tr>
<tr><td>2</td><td>மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td colspan="3">ந.க.எண்.147 /2025/இ1</td><td></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 08.05.2025 | **பொருள் எண்.30**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இயங்கிவரும் நீரேற்று நிலையங்கள் மற்றும் உந்து நிலையங்களில் அவ்வப்போது ஏற்படும் மின்மோட்டார்கள் மற்றும் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சீர்செய்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.. 147 /2025/இ1 | தீர்மானம் எண்.30<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.31**<br>துறைமுக அலுவலர் , தமிழ்நாடு கடல்சார் வாரியம் நாகப்பட்டினம், அவர்களின் கடிதம் எண்.576/சிபொ/2023 நாள் 24.04.2025ல் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை (இலங்கை) வரை பயணிகள் கப்பல் போக்குவரத்து நடைபெற்றுவருவதனை முன்னிட்டு நெடுஞ்சாலை துறையினரால் வாகன நிறுத்துமிடம் மற்றும் அணுகு சாலை ஆகியவை அமைப்பதற்கு பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், நாகப்பட்டினம் துறைமுகத்தின் வடக்கு பகுதியில் அமைய உள்ள சாலை நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமானதாக இருப்பதால் நகராட்சி நிருவாகத்திடம் தடையின்மை சான்று வழங்கிட அறிவுறுத்தியும், மேற்கண்ட பணிகளை துரிதமாக மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக இந்திய அரசின் வெளியுறவு துறை அமைச்சகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், நெடுஞ்சாலை துறையினரால் வாகன நிறுத்துமிடம் மற்றும் அணுகு சாலை ஆகியவை அமைப்பதற்கு கீழ்கண்ட பணிகளை நாகப்பட்டினம் நகராட்சி நிருவாகத்தின் மூலம் செய்துதர கோரி அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>1. நகராட்சிக்கு சொந்தமான சாலையின் எல்லையை அளவீடுசெய்து எல்லைக்கல் அமைத்துத்தரப்பட வேண்டும்.<br>2. நகராட்சிக்கு சொந்தமான சாலையில் ஓரமாக உள்ள 8 மரங்களை அகற்றி தரப்பட வேண்டும்.<br>3. நகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு கட்டிடத்தில் மதில் சுமார் 3.50 மீட்டர் நீளத்திற்கு குடியிருப்பு பகுதியில் உள்பக்கமாக மாற்றி அமைத்துதரப்பட வேண்டும்.<br>4. கலங்கரை விளக்கின் எதிர்புறம் மற்றும் ப ழைய துறைமுகத்தின் நுழைவுவாயிலின் எதிர்புறம் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித்தரப்பட வேண்டும்.<br>5. மேற்கண்ட சாலையில் நெடுஞ்சாலை துறையினர் பணிகள் மேற்கொள்ள தடையின்மை சான்று.<br>மேற்கண்ட பொருள் வரப்பெற்ற கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டதனை தொடர்ந்தும், மேற்கண்ட சாலையில் நகராட்சியின் மூலம் புதியதாக பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் பதிப்பதற்கு | தீர்மானம் எண்.<br>எண்.31 |

| | | |
|---|---|---|
| | எவ்வித இடையூறும் இல்லா வகையில் உரிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு — **1** — மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.1184 /2025/இ1 | |
| 08.05.2025 | **பொருள் எண்.32**<br>**நகர்மன்ற துணைத்தலைவர் எம்.ஆர்.செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ எனது 7 – வது வார்டு சலவைகுளம் மேல்கரை கல்வர்ட் உடைந்தும் சிதலமைந்தும் உள்ளதால் போக்குவரத்திற்கு இடையூராகவும், முற்றிலும் உடைந்து பாதசாரிகள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதால் உடன் புதிய கல்வர்ட் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். எண்.32<br>தீர்மானிக்கப்பட்டது. |
| 08.05.2025 | **பொருள் எண்.33**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி G.திவ்யா அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு**<br>➢ எனது 1 வார்டுக்கு உட்பட்ட சிவன் வடக்கு வீதி , சிவன் தெற்கு வீதி, ஒற்றை கம்மாளத் தெரு, தோணித்துறை தெரு இரட்டை கம்மாளர் தெரு ஆகிய தெருக்களில் வடிகால் அமைத்துதருமாறும் மற்றும் ஒற்றை கம்மாள தெரு, சிவன் தெற்கு மட விளாகம், இரட்டை கம்மாள தெரு, கோசா குள தெரு, தோணித்துறை தெரு ஆகிய தெருக்களில் சாலைகள் அமைத்துதரவேண்டும்.'<br>➢ சிவன் மேல வீதி, சிவன் வடக்கு வீதி, சிவன் மேல மட விளாகம், ஆகிய தெருக்களுக்கு புதிதாக கல்வெட்டு அமைத்து தரும்படி இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண்.33<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.34**<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.D.செந்தில்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல் –**<br>12 வார்டு பகுதியில் அமைந்துள்ள சந்திரா கார்டனில் சுமார் 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்கள் வீட்டு முகவரி வடக்கு பால்பன்னைச்சேரி மெயின் ரோடு என்று வருகின்றது. அதனை மாற்றம் செய்து நகராட்சியில் இணைத்து சந்திரா கார்டன் என்ற நிரந்தர முகவரியாக மாற்றம் செய்ய வேண்டும் என இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். எண்.34<br>தீர்மாணிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 08.05.2025 | **பொருள் எண்.35**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.S.ஷோபனா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்**<br>➢ 21 வார்டு உட்பட்ட தாமரைக்குளத்தில் பொதுமக்கள் காலையிலும், மாலையிலும் நடைபயணம் செல்வதால் பாதுகாப்பு கருதி கண்காணிப்பு கேமரா (CCTV) அமைத்து தருமாறும் மற்றும் தாமரைக்குளத்தில் சுற்றியுள்ள தடுப்பு வேலிகள் சிதளமைடந்துள்ளதால் பாதுகாப்பு கருதி உடனடியாக சரி செய்து தரவேண்டும் என இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். எண்.35<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.36**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பா.கலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல்**<br>➢ 23 வார்டில் மகம் ரோட்டில் நல்லியந்தோட்டத்தில் இருந்து மழைநீர் வெளிவருவதற்கு வடிகால் அமைத்திடவும் மற்றும் வேர்ஹவுஸ் ரோட்டில் நாகதோப்பு பள்ளிவாசல் அருகில் வடிகால் அமைத்து தருமாறும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். எண்.36<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.37**<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.த.கமலநாதன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல் –**<br>➢ 35 வார்டு சேவாபாரதி பகுதியில் சிறு பிள்ளைகள் விளையாடுவதற்கு இடம் இல்லாததால் ரோடுகளில் விளையாடுவதால் அடிக்கடி விபத்து ஏற்பட்டு பெரும் பாதிப்பிற்க்குள்ளாகிறார்கள். ஆகையினால் பிள்ளைகளின் பாதுகாப்பை கருதி பிள்ளைகள் விளையாடுவதற்கு சிறுவர் பூங்கா அமைத்து தரும்படி இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். எண்.37<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.38**<br>**நகர்மன்ற உறுப்பினர் திரு.ப.ஞானமணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மான நகல் –**<br>➢ 36 வார்டு டாடா நகரில் புதிதாக கட்டபட்டு வரும் நகர்நலமையம் வேலை முடியும் தருவாயில் உள்ளது. கட்டிடத்தில் முன்பகுதி மற்றும் வலதுபுறம் ஆகிய பகுதிகள் பள்ளமாக உள்ளதால் அதில் மணல் நிரப்பி பேவர் பிளாக் அமைத்து தரும்படி இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். எண்.38<br>தீர்மாணிக்கப்பட்டது |
| 08.05.2025 | **பொருள் எண்.39**<br>நாகப்பட்டினம் நகராட்சியில் பொதுப்பிரிவு மற்றும் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரிந்து வரும் கீழ்கண்டுள்ள பணியாளர்கள் கடந்த 20.04.2000 ஆம் தேதி முதல் 19.04.2025 ஆம் தேதி வரை தொடர்ந்து 25 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்துள்ளதால் தமிழ்நாடு அரசாணை எண்.390 நிதிதுறை (Pay Cell) நாள்./07/11/2012 இல் | தீர்மானம் எண். எண்.39<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது |

தெரிவிக்கப்பட்டுள்ளப்படி ஒரு பணியாளருக்கு நற்சான்றிதழ் மற்றும் பரிசுதொகை ரூ.2000/- வீதம் மூன்று பணியாளர்களுக்கு கூடுதல் தொகை ரூ.6000/- மட்டும் நகராட்சி பொது நிதியில் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **பெயர் மற்றும் பதவி திருவாளர்கள்** | **பணியில் சேர்ந்த நாள்** | **25 ஆண்டுகள் பணி முடிந்த நாள்** |
|---|---|---|---|
| 1. | அ.தாமோதரன் உதவியாளர் | 20.04.2000 | 19.04.2025 |
| 2 | செ.பூவராகவன் உதவியாளர் | 20.04.2000 | 19.04.2025 |
| 3 | வி.முருகேசன் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 20.04.2000 | 19.04.2025 |

| | | |
|---|---|---|
| அலுவலகக்குறிப்பு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க. எண்.01 /2025/சி1

08.05.2025

## பொருள் எண்.40

நாகப்பட்டினம் நகராட்சிக்கு வழக்குகள் பார்த்து வந்த திரு.K.சுப்ரமணியன் வழக்கறிஞர் உடல் நல குறைவால் கடந்த 04.05.2025 அன்ற இயற்கை எய்தினார் அவர்கள் பார்த்து வந்த நகராட்சி வழக்கு கட்டுகள், கோப்புகள் மற்றும் நீதிமன்ற வழக்குகளை பார்த்து வர புதிய நகராட்சி நிலை வழக்கறிஞர் நியமித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக்குறிப்பு | | மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க. எண்.2458 /2023/பி2

தீர்மானம் எண். எண்.40

அ.கு, அனுமதிக்கப்பட்டது

/உண்மை நகல்/

(ஒம்) இரா.மாரிமுத்து

நகரமன்ற தலைவர்